**பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம், சேலம்.**

**முன்னிலை–திரு. சு. ஜெயசிங், B.Com., B.L.,**
**அமர்வு நீதிபதி,**
**பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்புநீதிமன்றம், சேலம்.**

**2026–ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 3ஆம் நாள் செவ்வாய் கிழமை.**

**சிறப்பு அமர்வு வழக்கு எண்.33/2022**
**(CNR No.TNSA25-000507-2024)**

| | | | |
|---|---|---|---|
| **குற்றமுறையிடுபவர்** | : | தமிழ்நாடு அரசுக்காக,<br>காவல் உதவி ஆணையாளர்,<br>அஸ்தம்பட்டி காவல் சரகம்,<br>சேலம் மாவட்டம்.<br>கன்னங்குறிச்சி காவல் நிலையம்,<br>குற்ற எண்.358/2022. | |
| **எதிரிகளின் பெயர்** | : | 1. | தேவராஜ் (26/2022) த/பெ. சேட்டு<br>கன்னங்குறிச்சி மெயின் ரோடு,<br>சின்னமுனியப்பன் கோவில் அருகில்,<br>சின்னதிருப்பதி, சேலம். |
| | | 2. | ஹரிஸ்கோகுல் (21/2022) த/பெ. சேட்டு,<br>கன்னங்குறிச்சி மெயின் ரோடு,<br>சின்னமுனியப்பன் கோவில் அருகில்,<br>சின்னதிருப்பதி, சேலம். |
| | | 3. | யாசின் (26/2022) த/பெ. முகம்மது கான்,<br>25. அண்ணாசாலை, 2வது தெரு,<br>சின்னதிருப்பதி, சேலம். |

<table>
<tr><th>S.No.</th><th colspan="5">CASE SUMMARY</th></tr>
<tr><td>i.</td><td>The period of remand of the Accused</td><td>:</td><td colspan="3">A1 to A3- 25.04.2022 to 03.10.2022</td></tr>
<tr><td>ii.</td><td>The date of filing of the complaint / final report in the Court</td><td>:</td><td colspan="3">29.08.2022</td></tr>
<tr><td>iii.</td><td>The date of committal of the case to the Court of Session</td><td>:</td><td colspan="3">--</td></tr>
<tr><td>iv.</td><td>The date of questioning of A1 to A4 U/s- 228, 240, 246 and 251 CrPC as the case may be</td><td>:</td><td colspan="3">U/s 228 of CrPC – 21.09.2023</td></tr>
<tr><td rowspan="7">v.</td><td rowspan="7">Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts; except routine petitions like petitions U/s 317 of code</td><td rowspan="7">:</td><td>CMP No.</td><td>Section / Prayer</td><td>Result</td></tr>
<tr><td>CMP 2992/2022 of PDJ Court, Salem</td><td>Bail U/s 437 r/w 167(2)(a)(ii) of CrPC</td><td>Allowed on 29.08.2022</td></tr>
<tr><td>CMP 4/2023 of PDJ Court</td><td>Advance hearing petition</td><td>Allowed on 04.07.2023</td></tr>
<tr><td>CMP3/2023 of PDJ Court</td><td>Surrender petition</td><td>Surrender accepted on 04.07.2023</td></tr>
<tr><td>CMP 5/2023 of PDJ Court</td><td>Warrant recall petition</td><td>Recalled on 04.07.2023</td></tr>
<tr><td>CMP 223/2025 of this Court</td><td>Recall petition U/s 311 of CrPC r/w 348 of BNSS</td><td>Allowed on 20.08.2025</td></tr>
<tr><td>CMP 7/2026 of this Court</td><td>Recall petition U/s 311 of CrPC r/w 348 of BNSS</td><td>Allowed on 12.01.2026</td></tr>
<tr><td rowspan="2">vi.</td><td rowspan="2">Date of examination in-chief and cross-examination of a</td><td rowspan="2">:</td><td>Name of the Witnesses</td><td>Date of Chief Examination</td><td>Date of Cross Examination</td></tr>
<tr><td>PW1 AnandhaRaj</td><td>20.05.2024</td><td>20.05.2024</td></tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | witness | | PW2 Seenivasan | 20.05.2024 | 20.05.2024 by Prosecution |
| | | | PW3 Rathinam | 13.02.2025 | 13.02.2025 by Prosecution |
| | | | PW4 Udhayakumar | 09.06.2025 & 23.07.2025 | 28.10.2025 |
| | | | PW5 Seenivasan | 04.07.2025 | 04.07.2025 by Prosecution |
| | | | PW6 Ganesan | 23.07.2025 | 28.10.2025 |
| | | | PW7 Semmalai | 23.07.2025 | -- |
| | | | PW8 Hariharan | 23.07.2025 | -- |
| | | | PW9 Mohanapriya | 23.07.2025 | 23.07.2025 by Prosecution |
| | | | PW10 Vadivel | 20.08.2025 | 20.08.2025 |
| | | | PW11 Dhilip | 28.10.2025 | 28.10.2025 by Prosecution |
| | | | PW12 Karthick | 16.12.2025 | 29.01.2026 |
| | | | PW13 Murugesan | 06.01.2026 | 29.01.2026 |
| Vii. | Date of examination of the Accused under Section 313 of Code | : | 12.01.2026 | | |
| Viii. | Details of abscondence of an Accused and his appearance/production, as the case may be | : | A2 - 16.06.2023 to 03.07.2023 | | |
| ix. | Grant of stay by superior Courts and the results thereof | : | NIL | | |

| | | |
|---|---|---|
| முதலாவது குற்றச்சாட்டு | : | A1 to A3–பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் என்பது தெரிந்திருந்தும், பொது பார்வையில் ஜாதி பெயரை சொல்லி கெட்ட வார்த்தையால் திட்டுதல்– பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்பு சட்டப்பிரிவு3(1)(r) & (s)ன் படி. |

| | | |
|---|---|---|
| இரண்டாவது குற்றச்சாட்டு | : | A1 to A3 – வீட்டினுள் அத்துமீறி உள்ளே நுழைதல்– இதச பிரிவு 450ன் படி |
| மூன்றாவது குற்றச்சாட்டு | : | A1 to A3 – தீ வைத்து சொத்தழிப்பு செய்தல்– இதச பிரிவு 436ன் படி |
| நான்காவது குற்றச்சாட்டு | : | A1 to A3 – சொத்தழிப்பு செய்தல்– இதச பிரிவு 427ன் படி. |
| ஐந்தாவது குற்றச்சாட்டு | : | A1 to A3 – கொலை மிரட்டல் விடுத்தல்– இதச பிரிவு 506(2)ன் படி. |
| ஆறாவது குற்றச்சாட்டு | : | A1 to A3 – பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் என்பது தெரிந்திருந்தும், பட்டியலில் கண்ட இதச பிரிவுகள் படியான குற்றங்களை ஏற்படுத்துதல்–பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள்தடுப்பு) சட்டப்பிரிவு 3(2)(va)ன் படி |
| எதிரிகளின் பதில் | : | பொய் வழக்கு |
| நீதிபதியின் தீர்மானம் | : | 1 முதல் 3ஆம் எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 450, 436, 427, 506(2) மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவு 3(1)(r)&(s). 3(2)(va)ன் படியானக் குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமற்ற வகையில் நிரூபிக்கப்படவில்லை |
| தண்டனை(அ)உத்தரவு | : | 1 முதல் 3ஆம் எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 450, 436, 427, 506(2) மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்பிரிவு 3(1)(r)&(s). 3(2)(va)ன் படியானக் குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமற்ற வகையில் நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து |

| | | |
|---|---|---|
| | | சந்தேகத்தின் பலனை 1 முதல் 3 எதிரிகளுக்கு வழங்கி 1 முதல் 3 எதிரிகளை குவிமுச பிரிவு 235(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1 முதல் 3 எதிரிகளால் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கும் பிணை பத்திரங்களை ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது. 1 முதல் 3 எதிரிகளால் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கும் பிணை பத்திரங்களை ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது. மேலும் இவ்வழக்கில் அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சி.பி என் 28/2022ல் உள்ள வழக்கு சொத்துக்களான அதசாபொ.1– பிளாஸ்டிக் பாட்டில், அ.த.சா.பொ.2– சாம்பல் ஆகியவற்றை மேல் முறையீட்டு காலத்திற்கு பின் அழித்து விடவும் உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு என் முன்பாக 21.09.2023 அன்று முடிவான விசாரணைக்கு கொண்டுவரப்பட்டு, குற்றமுறையீடுபவரான அரசுக்காக திரு.S.இசைஅமுதன், அரசு சிறப்பு வழக்கறிஞர் அவர்களும், 1 முதல் 3ஆம் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.V.பிரின்ஸ், அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், அரசு தரப்பில் முன்னிடப்பட்ட ஆவண மற்றும் வாய்மொழி சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டு, இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

**சேலம் மாநகரம், அஸ்தம்பட்டி காவல் ஆணையாளர் அவர்கள் தாக்கல் செய்த வழக்கின் சுருக்கம்**:-

சேலம் மாவட்டம், சின்னதிருப்பதி, காந்திநகர், கதவு எண் 138ல் வசித்து வரும் பட்டியல் இனத்தை சார்ந்த சாட்சி ஆனந்தராஜின் ஊரில் உள்ள காளியம்மன் கோவில் பண்டிகையில் பொங்கல் வைத்து கிடா வெட்டும் நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்ததாகவும், இந்து வன்னியர் இனத்தை சார்ந்த இவ்வழக்கின் 1 மற்றும் 2ஆம் எதிரிகள் முஸ்லிம் இனத்தை சார்ந்த 3ஆம் எதிரி சாட்சி ஆனந்தராஜாவை பார்த்து கிண்டல் அடித்து கொண்டும், கலாட்டா செய்து கொண்டும் இருந்ததால் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக சாட்சி ஆனந்தராஜின் வண்டியை மறித்து இந்த பக்கம் நீ எதுக்குடா வர்ற என்று கேட்டு அவரை கையால் அடித்தீரென்றும், பின்னிட்டு 17.04.2022ஆம் தேதி நள்ளிரவு 2.00 மணிளளவில் சாடசி ஆனந்தராஜ் தனது மனைவி மற்றும் கைக்குழந்தையுடன் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த போது பட்டியலில் கட்ணட சாதியினர் மற்றும் பழங்குடியயனர் வகுப்பை சேர்ந்த சாட்சி ஆனந்தராஜை பொது இடத்தில் வைத்து அவரின் ஜாதி பெயரை சொல்லி "ஏண்டா சக்கிலி, தேவடியா பையா" என்று கத்திக் கொண்டே வெட்ட ஓடி வந்தீர்களென்றும், இவ்வாறாக பட்டியலில் கண்ட சாதியினர் மற்றும் பழங்குடியினர் வகுப்பை

சேர்ந்த சாட்சி ஆனந்தராஜை கெட்ட வார்த்தையாலும், ஜாதிப்பெயரை சொல்லியும் திட்டி அவருக்கு அவமரியாதையை ஏற்படுத்தி அவருக்கு மதிப்பிழப்பு உண்டாக்கியும், 1 முதல் 3 எதிரிகள் கையில் கத்தி மற்றும் வீச்சருவாளால் வைத்துக் கொண்டு வாதியை வெட்ட வந்த போதது, சா்சி ஆனந்தராஜ் அலறிக் கொண்டு வேகமாக வீட்டிற்குள் சென்று கதவை தாழ்ப்பாள் போட்டுக் கொண்டதால் எதிரிகள் கையில் வைத்திருந்த கத்தி மற்றும் வீச்சருவாளால் சாட்சி ஆனந்தராஜ் வீட்டின் கதவை சரமாரியாக வெட்டி உடைத்து வீட்டிற்குள் அத்துமீறி உள்ளே நுழைய முற்பட்டதாகவும், மேலும் அவர்கள் கொண்டு வந்த பெட்ரோலால் சாட்சி ஆனந்தராஜின் வீட்டிற்கு முன்பு நிழலுக்காக தென்னங்கீற்றால் மேய்ந்திருந்த கூரையின் மேல் ஊற்றி தீ வைத்து விட்டதாகவும், மேற்படி கூரையை சேதப்படுத்தி சேதத்தை உண்டாக்கியதாகவும், மேலும் சாட்சி ஆனந்தரைாசு பாரத்து இவனை இப்படியே விடக்கூடாது வீட்டோடு தீ வைத்து கொளுத்தி விடுவோம் என்றும், எவனாவது எங்க பக்கத்தில வந்து பிடிச்சிங்கன்னா உங்களுக்கும் இதே கதிதான் என்று சொல்லி கொலை மிரட்டல் விடுத்தக் குற்றத்திற்காக 1 முதல் 3 எதிரிகள் இதச பிரிவு 450, 436, 427, 506(2)ன் படி மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும்

பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டப்பிரிவுகள் 3(1)(r)&(s) மற்றும் 3(2)(va)ன் படி குற்றம் புரிந்துள்ளார்கள் என்று சேலம் மாநகரம், அஸ்தம்பட்டி காவல் ஆணையாளர் எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

3. இவ்வழக்கு சேலம், முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிறகு மேற்படி வழக்காவணங்களை பரிசீலனை செய்து, அதன்படி மேற்படி வழக்கு கோப்பானது சேலம், முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் Spl.SC.No.33/2022 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு 1 முதல் 3ஆம் எதிரிகள் மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளனர். அவர்களுக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207ன் படிக்கு இலவசமாக வழங்கப்பட்டு, அரசு தரப்பினர், எதிரிகள் தரப்பினர் இரு சாரருக்கும் அளிக்க வேண்டிய சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு இவ்வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் 1 முதல்3ஆம் எதிரிகள் குற்றம் புரிந்திருப்பார்கள் என்று கருதவும், கருத்தில் கொண்டு வழக்கு நடவடிக்கைகளை செயலாற்றவும் வழிவகுப்பனவாக இருந்தமையால் 1 முதல் 3ஆம் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 450, 436, 427, 506(2)ன் படி

மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டப்பிரிவுகள் 3(1)(r)&(s) மற்றும் 3(2)(va)ன் படி குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி வினவ 1 முதல் 3ஆம் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என குற்றத்தையும் குற்றச்சாட்டையும் மறுத்து விசாரணை வேண்டினர்.

4. இந்நிலையில் பட்டியல் இனத்தவர் மற்றும் வன்கொடுமை தடுப்பு சட்டப்படி பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கு, இந்த சிறப்பு நீதிமன்றம் துவங்கப்பட்ட காரணத்தினால், மேற்படி வழக்கு கோப்பானது இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு Spl. SC.No.33/2022 என அதே எண்ணில் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டுள்ளது.

5. அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.13 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் 14 வரையான சான்றாவணங்களும், அதசாபொ.1 மற்றும் அதசாபொ.2 ஆகிய சான்று பொருட்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. **<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் வாயிலாக எழும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கமாவது</u>**:

அசா1 ஆனந்தராஜ் தனது சாட்சியத்தில் சுமார் 2 ஆணடுகளுக்கு முன்பு அதிகாலை 02.30 மணியளவில் தான், தன் மனைவி மற்றும் பிள்ளைகள்

சின்னதிருப்பதியில் காந்தி நகரில் தங்கள் வீட்டில் இருந்தபோது, எதிரிகள் தங்கள் வீட்டிற்கு வந்து வீட்டு கதவை உடைத்து கத்தி, அரிவாள், பாட்டிலில் பெட்ரோல் ஆகியவற்றை வைத்து கொண்டு வீட்டு கூரையை எரித்துவிட்டார்கள் என்றும், அவர்கள் கொண்டு வந்த ஆயுதங்களால் கதவை உடைத்துவிட்டார்கள் என்றும், திருவிழா சமயத்தில் எதிரிகள் பெண்களிடம் தவறாக நடந்து கொண்டதை, தான் தட்டி கேட்டதால் முன்விரோதம் கொண்டு எதிரிகள் தங்கள் வீட்டிற்கு வந்து மேற்படி குற்றத்தை செய்துவிட்டார்கள் என்றும், எதிரி தன்னை பார்த்து "எஸ்சி நாயே" என்று திட்டி, தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், தன்னை சாகடித்துவிடுவேன் என்றும், மிரட்டியதாகவும், சேத மதிப்பு சுமார் ரூ.10000/- இருக்கும் என்றும், எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்து சென்ற பிறகு தான் கன்னகுறிச்சி காவல் நிலையம் சென்று எழுத்து மூலமான புகார் கொடுத்ததாகவும், அந்த புகார் அ.சா.ஆ.1 என்றும் சாட்சியமளித்துள்ளார்

7. அசா2 சீனிவாசன் தனது சாட்சியத்தில் அ.சா.1 தன் தம்பி என்றும், எதிரிகளை தெரியும் என்றும், வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார்

8. அசா3 ரத்தினம் தனது சாட்சியத்தில் எதிரிகள் மற்றும் புகார்தாரரை தனக்கு தெரியும் என்றும், தனக்கு இவ்வழக்கை பற்றி எதுவும் தெரியாது என்றும், சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு காலை சுமார் 09.00 மணியளவில்

ஆனந்தராஜ் வீட்டு அருகே கூட்டமாக இருந்தார்கள் என்றும், போலீசார் படம் வரைந்து கொண்டிருந்தார்கள் என்றும், தன்னிடம் கையொப்பம் கேட்டதன் பேரில் தான் கையொப்பம் போட்டதாகவும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், ஊர்க்காரர்கள் கையொப்பம் போட்டார்கள் என்றும், தானும், கையொப்பம் போட்டதாகவும், பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.2 என்றும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.3 என்றும், இது சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

9. அசா4 உதயகுமார் தனது சாட்சியத்தில் 1, 2, 3 எதிரிகள் தன் வீட்டு அருகே வசிக்கிறார்கள் என்றும், தன்னுடைய மாமா ராஜா என்பவர் வீட்டிற்கு 1, 2, 3 எதிரிகள் அடிக்கடி வந்து செல்வார்கள் என்றும், 17.04.2022 ம் தேதி சுமார் இரவு 02.00 மணியளவில் 1, 2, 3 எதிரிகள் அ.சா.1 ஆனந்தராஜ் வீட்டிற்கு வந்து பிரச்சனை செய்தார்கள். சம்பவத்திற்கு முன்பாக சுமார் 2 நாட்களுக்கு முன்பு தங்கள் ஊர் காளியம்மன் கோவில் திருவிழாவில் அ.சா.1 ஆனந்தராஜ்க்கும், 1, 2,3 எதிரிகளுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு முன்விரோதம் இருந்ததாகவும், 1, 2, 3 எதிரிகள் சம்பவ சமயம் கையில் கத்தியை எடுத்து கொண்டு அ.சா.1 ஆனந்தராஜின் வீட்டின் கதவை தட்டி கதவை திறங்கடா

என்று சத்தம்போட்டு கொண்டிருந்த போது அ.சா.1ன் மனைவி தன்னுடைய மனைவிக்கு போன் செய்ததன் மூலம் தாங்கள் வீட்டிற்கு வெளியே வந்து பார்த்த போது 1, 2, 3 எதிரிகள் கையில் வைத்திருந்த பிளாஸ்டிக் பாட்டிலில் இருந்த பெட்ரோலை எடுத்து அ.சா.1ன் வீட்டின் மேல் பெட்ரோலை விட்டார்கள் என்றும், அ.சா.1ன் வீடு மாடி வீடு என்றும், அதன் முன்புறம் கீற்று கூரை வேயப்பட்டிருந்ததாகவும், அதில் பெட்ரோலை விட்டு 1, 2, 3 எதிரிகள் தீப்பெட்டியில் இருந்த தீக்குச்சி பொருத்தி அதை கீற்று கூரை மீது போட்டு தீ வைத்தார்கள் என்றும், தான் அதை தன்னுடைய மொபைல் போனில் வீடியோ எடுத்த போது கன்னங்குறிச்சியில் காவல் அலுவலராக பணி புரிந்த ஜாபர் என்பரின் செல்போன் எண் தனக்கு தெரியும் என்றும், அவருடைய வாட்ஸ்அப்க்கு தான் தன்னுடைய மொபைல் போனில் எடுத்த வீடியோவை அனுப்பி வைத்ததாகவும், அந்த வீடியோ தற்போதும் தன்னுடைய மொபைல் போனில் உள்ளது என்றும், பின்னிட்டு சம்பவ தினத்தில் சம்பவ இடத்திற்கு வந்தபோலீசார் விசாரணை மேற்கொண்டு தயாரித்த பார்வை மகஜரில் தன்னுடைய கையொப்பம் உள்ளதாகவும், அ.த.சா.ஆ.4 –பார்வை மகஜரில் தானும், ரத்தினம் என்பவரும் சாட்சியாக கையொப்பமிட்டதாகவும், அதில் உள்ள முதல் கையொப்பம் தன்னுடையது என்றும், அந்த பார்வை மகஜர் அ.த.சா.ஆ.4 என்றும், சம்பவ இடத்தில் தன்னையும், ரத்தினத்தையும் சாட்சியாக வைத்து போலீசார் சாம்பல் மற்றும் எரிந்த நிலையில் இருந்த பெட்ரோல் வாடையுடன்

கூடிய பிளாஸ்டிக் பாட்டில் ஒன்றை கைப்பற்றியதாகவும், அவற்றையும் தன்னிடம் காட்டினால் தன்னால் அடையாளம் காட்டமுடியும். இதற்காக தயாரித்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் தன்னுடையது தான். கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.5 என்றும், தன்னிடம் காட்டப்படும் அ.த.சா.பொ.1.–பிளாஸ்டிக் பாட்டில் சம்பவ இடத்தில் இருந்து போலீசார் கைப்பற்றுதல் மகஜரில் தன்னை சாட்சியாக வைத்து கைப்பற்றியதாகவும், பிளாஸ்டிக் பாட்டில் சம்பவ இடத்தில் இருந்து போலீசார் மாதிரிக்கு எடுத்த சாம்பல் கொஞ்சம் தன்னிடம் காட்டப்படுவதுதான் என்றும், சாம்பல் கொஞ்சம் அ.த.சா.பொ.2. என்றும்சாட்சியமளித்துள்ளார்.

10. அசா5 சீனிவாசன் தனது சாட்சியத்தில் எதிரிகளை தனக்கு தெரியாது என்றும், அசா.1 ஆனந்தராஜ் தன் பக்கத்து வீட்டில் இருப்பவர் என்றும், TVS Star City என்ற இருசக்கர வாகனம் தனக்கு பாத்தியமாக உள்ளது என்றும், அதன் பதிவெண் தனக்கு ஞாபகம் இல்லை. தன் அண்ணன் ரஞ்சித் (எ) பாலகிருஷ்ணனிடம் Splender இருசக்கர வாகனம் உள்ளதாகவும், இந்த வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், இந்த வழக்கு சம்பவமாக தன்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றும்சாட்சியமளித்துள்ளார்.

11. அசா6 கணேசன் தனது சாட்சியத்தில் கடந்த 11.05.2022 ம் தேதி சேலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மண்டல துணை வட்டாட்சியராக பணியில் இருந்தபோது கன்னங்குறிச்சி காவல் நிலைய குற்ற எண் 358/2022 SC/ST

வழக்கின் எதிரிகள் தேவராஜ் த/பெ சேட்டு, ஹரிஷ்கோகுல் த/பெ சேட்டு, யாஷின் த/பெ மகமூத் கான் என்பவர்களுக்கு ஜாதி சான்றிதழ்கள் கேட்டு காவல் உதவி ஆணையாளர் அஸ்தம்பட்டி சரகம் அவர்கள் கொடுத்த வேண்டுகோள் கடிதம் பெற்று அதனடிப்படையில் குமாரசாமிப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சேலம் நகரம் வருவாய் ஆய்வாளர் ஆகியோர்களின் அறிக்கை பெற்று மேற்படி எதிரிகள் தேவராஜ் த/பெ சேட்டு, ஹரிஷ்கோகுல் த/பெ சேட்டு என்பவர்களுக்கு என்பவர் இந்து வன்னியர் என்ற மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தை சேர்ந்தவர் என்றும், யாஷின் த/பெ மகமூத் கான் என்பவருக்கு அஸ்தம்பட்டி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சேலம் நகரம் வருவாய் ஆய்வாளர் ஆகியோர்களின் அறிக்கை பெற்று அவர் இஸ்லாமிய பட்டாணி என்ற பிற்படுத்தப்பட்ட சமூகத்தை சேர்ந்தவர் என்று 11.05.2022ம் தேதியில் தனித்தனியே ஜாதி சான்றிதழ்கள் வழங்கியதாகவும், தன்னிடம் காட்டப்படும் ஜாதி சான்றிதழ்கள் தன்னால் வழங்கப்பட்டதுதான் என்றும், எதிரிகள் தேவராஜ் த/பெ சேட்டு, ஹரிஷ்கோகுல் த/பெ சேட்டு என்பவர்களுக்கு ஜாதி சான்றிதழ்கள் அ.த.சா.ஆ.6 வரிசை என்றும் யாஷின் த/பெ மகமூத் கான் என்பவருக்கு ஜாதி சான்றிதழ் அ.த.சா.ஆ.7 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

12. அசா7 செம்மலை தனது சாட்சியத்தில் கடந்த 11.05.2022 ம் தேதி சேலம் வட்டாட்சியராக பணியில் இருந்தபோது கன்னங்குறிச்சி காவல் நிலைய குற்ற எண் 358/2022 SC/ST வழக்கின் புகார்தாரர் ஆனந்தராஜ் த/பெ செல்வம்

என்பவருக்கு ஜாதி சான்றிதழ் கேட்டு அஸ்தம்பட்டி சரகம், காவல் உதவி ஆணையாளர் அவர்கள் கொடுத்த வேண்டுகோள் கடிதம் பெற்று அதன் அடிப்படையில் கன்னங்குறிச்சி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சேலம் டவுன் வருவாய் ஆய்வாளர் ஆகியோர்களின் அறிக்கை பெற்று மேற்படி புகார்தாரர் ஆனந்தராஜ் த/பெ செல்வம் என்பவர் இந்து அருந்ததியர் என்ற பட்டியல் இனச் சமூகத்தை சேர்ந்தவர் என்று 11.052022ம் தேதியில் அ.த.சா.ஆ.8–ஜாதி சான்றிதழ் வழங்கியதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

13. அசா8 ஹரிஹரன் தனது சாட்சியத்தில் தான் கன்னங்குறிச்சியில் வசித்து அங்குள்ள பேருந்து நிறுத்தத்தில் ஒன் டச் ஸ்டியோஸ் என்ற பெயரில் கடந்த 4 1/2 வருடங்களாக ஸ்டியோ வைத்து புகைப்பட கலைஞராக இருந்து தொழில் செய்து வருவதாகவும், கடந்த 2022ம் வருடம் ஒரு நாள் கன்னங்குறிச்சி காவல் நிலையத்தில் இருந்து காவல் அலுவலர்கள் தன்னை அழைத்ததன் பேரில் கன்னங்குறிச்சி காவல் நிலையத்திற்கு சென்று பின்னர் சின்னதிருப்பதி, காந்தி நகருக்கு தான் போலீசாருடன் சென்று அங்கு ஒரு வீட்டின் முன்புறம் தீ பிடித்து எரிந்து இருந்ததை போலீசார் வேண்டுகோள் படி பல கோணங்களில் புகைப்படங்கள் எடுத்து அதை அச்சிட்டு பின்னர் அதை குறுந்தகட்டில் பதிவு செய்து போலீசாரிடம் புகைப்படங்கள் மற்றும் குறுந்தகடு ஆகியவற்றை ஒப்படைத்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் அ.த.சா.ஆ.9 ஆன

புகைப்படங்கள் மற்றும் குறுந்தகடு ஆகியவை தான் போலீசாரிடம் ஒப்படைத்ததாகும் என்றும்சாட்சியமளித்துள்ளார்.

14. அசா9 மோகனபிரியா தனது சாட்சியத்தில் தங்கள் வீடு மெத்தை வீடு என்றும், தாங்கள் இந்து அருந்ததியர் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றும், 1 முதல் 3 எதிரிகளை தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வீடு 2 வருடத்திற்கு முன்பு தீ பிடித்து எரிந்தது என்பதை புகைப்படத்தில் காட்டப்பட்டுள்ளது என்றும், யாரோ தங்கள் வீட்டை தீ வைத்து விட்டார்கள் என்றும், தீ வைத்தவர்கள் யார் என்று தங்களுக்கு தெரிய வரவில்லை என்றும், இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும்சாட்சியமளித்துள்ளார்.

15. அசா10 வடிவேல் தனது சாட்சியத்தில் கடந்த 17.04.2022ம் தேதி. பணியில் இருந்தபோது காவல் உதவி ஆணையாளர் அஸ்தம்பட்டி சரகம், சேலம் மாநகரம் அவர்கள் கொடுத்த குற்ற நிகழ்விட அழைப்பாணையை பெற்று சம்பவ இடத்திற்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு சம்பவ இடத்தில் காணப்பட்ட ஆய்விற்கு தேவைப்படும் தடய பொருட்களை சேகரித்து குற்றப்புலனாய்வு அதிகாரியிடம் சமர்ப்பித்தாகவும், சம்பவம் நடந்த இடமானது சின்னதிருப்பதி, காந்தி நகர், 3வது கிராஸ், கதவு எண் 138ல் நிகழ்ந்துள்ளதாகவும், இந்த குற்றம் நிகழ்ந்த வீட்டில் தெற்கு புற வாயில் கதவின் கூர்மையான ஆயுதங்களை கொண்டு கொத்தி இருந்ததற்கான அடையாளம் காணப்பட்டதாகவும், தெற்கு

புறத்தின் வீட்டிற்கு முன்பு காய்ந்த தென்கீற்று ஓலையால் வேயப்பட்ட பந்தல் போன்ற அமைப்பும், கிழக்கு புறத்திலும் காணப்பட்டாகவும், மேலும், தெற்கு புற வாசலிலும், கிழக்கு புற வாசலிலும், தென்னை ஓலை வேயப்பட்ட பந்தலில் இரண்டு வாசல்படிக்கு உட்புறத்திலும், தீ பிடித்து எரிந்ததற்கான அடையாளம் காணப்பட்டதாகவும், எரிந்த சாம்பல் மற்றும் இதர கழிவு இரண்டு வாசல் புறத்தின் அடியிலும் காணப்பட்டதாகவும், எரிந்த சாம்பல் எந்த எரிப்பொருட்கள் கொண்டு எரிக்கப்பட்டது என்பதற்கு உகந்தபடி காற்று புகாத பிளாஸ்டிக் புட்டியில் சேகரிக்கப்பட்டதாகவும், மேலும், கிழக்கு புற வாசலில் மூன்று எரிந்த தீக்குச்சிகள் கண்டெடுக்கப்பட்டு சேகரிக்கப்பட்டதாகவும், சம்பவம் நடந்த வீட்டின் தெற்கு புறத்தில் TN 24 C 2120 என்ற பதிவெண் கொண்ட Star City என்ற இருசக்கர வாகனம் நிறுத்தப்பட்டிருந்ததாகவும், இந்த வாகனத்தின் எரிபொருள் அடங்கிய டேங்கில் கூர்மையான ஆயுதத்தால் இரண்டு முறை கொத்தியதால் ஏற்பட்ட இரண்டு பள்ளங்கள் காணப்பட்டதாகவும், எரிபொருள் டேங்கில் இருந்து வெளி வரும் பிளாஸ்டிக்கினாலான டியூப் நீக்கப்பட்டிருந்ததாகவும், முடிவில், எரிந்து போன சாம்பல் மற்றும் எரிந்த தீக்குச்சிகள் சேகரிக்கப்பட்டு குற்றப்புலனாய்வு அதிகாரியிடம் சமர்ப்பித்ததாகவும், குற்ற நிகழ்விட பார்வை அறிக்கை அ.த.சா.ஆ.10 என்றும், சமர்ப்பித்த தடய பொருட்களை சென்னை தடய அறிவியலுக்கு அனுப்பி என்ன எரிபொருள் கொண்டு எரிக்கப்பட்டது என்ற ஆய்விற்கு உட்படுத்த வேண்டும் என்று

குற்றப்புலனாய்வு அதிகாரியிடம் அறிவுரை வழங்கியதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

16. அசா11 திலீப் அவரது சாட்சியத்தில் அ.சா.1 ஆனந்தராஜ் என்பவரை தனக்கு தெரியும் என்றும், அவர் தன் நண்பர் என்றும், 1 முதல் 3 எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

17. அசா12 கார்த்திக் அவரது சாட்சியத்தில் கடந்த 17.04.2022 தேதி, காலை 06.30 மணிக்கு, கன்னங்குறிச்சி காவல் நிலையத்தில் தான் காவல் உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது, அ.சா.1 ஆனந்தராஜ் த/பெ. செல்வம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த அ.தசா.ஆ.1 புகார் மனுவின் அடிப்படையில் நிலைய குற்ற எண்358/2022 சட்டப்பிரிவுகள் 294(b), 450, 436, 427, 506(2) இதச உ/இ 3 (1)(r), 3(1)(s), 3(2)(va) பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு ) சட்டப்படி அ.தசா.ஆ.11– முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கை அசல் மற்றும் புகார் வாக்குமூலத்தை இணைத்து சேலம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பியதகாவும், மற்ற முதல் தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியதாகவும், இந்த வழக்கு SC/ST வழக்கு என்பதால் இவ்வழக்கை

புலன் விசாரணை செய்ய அதிகாரியை நியமனம் செய்ய வேண்டி சேலம் மாநகர காவல் துணை ஆணையாளர் வடக்கு சரகம் அவர்களுக்கு முதல் தகவல் அறிக்கை நகலுடன் வேண்டுகோள் கடிதத்தை அனுப்பி வைத்ததாகவும், இது குறித்து காவல் உதவி ஆணையாளர் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

18. அசா13 அஸ்தம்பட்டி சரகம் காவல் உதவி ஆணையாளர் முருகேசன் தனது சாட்சியத்தில் சேலம் மாநகரம் அஸ்தம்பட்டி சரகம் காவல் உதவி ஆணையாளராக பணிபுரிந்த போது 17.04.2022 தேதி சேலம் மாநகர வடக்கு காவல் துணை ஆணையர் பிறப்பித்த C.No.10/SC and ST, Act/DCP/North/SLMC/2022 படியான செயல்முறை ஆணைப்படி கன்னங்குறிச்சி காவல் நிலைய குற்ற எண்.358/2022 ச.பி. 294(b), 450, 436, 427 மற்றும் 506(ii) இதச மற்றும் 3(1)(r), 3(1)(s) மற்றும் 3(2)(va) பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டப்படியான வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்து கொண்டு, கடந்த 17.04.2022 தேதி சேலம் மாநகர வடக்கு காவல் துணை ஆணையர் பிறப்பித்த C.No.10/SC and ST, Act/DCP/North/ SLMC/2022 படியான செயல்முறை ஆணை அ.த.சா.ஆ.12 என்றும் சாட்சியமளித்துள்ளார்.

19. அசா13 காவல் உதவி ஆணையாளர் முருகேசன் மேலும் தனது சாட்சியத்தில் அன்றைய தினமே பகல் 11.00 மணியளவில் சம்பவம் இடம் சென்று பொது சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு சம்பவ இடத்திற்கான அ.த.சா.ஆ.4 பார்வை மகஜர் மற்றும் அ.த.சா.ஆ.13 மாதிரி வரைபடம் தயார் செய்து, பார்வை மகஜரில் சாட்சிகள் ரத்தினம், உதயகுமார் ஆகியோரின் சாட்சி கையொப்பம் பெற்று, 12.15 மணியளவில் சம்பவ இடத்தில் கிடந்த சம்பவத்தின் போது பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் பாட்டிலையும், எரிந்த கூரையின் சாம்பல் சிறிதளவு ஆகியவற்றை அ.த.சா.ஆ.5 கைப்பற்றுதல் மகஜர் மூலம் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி, கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகளின் கையொப்பம் பெற்றுள்ளார்.

20. அசா13 காவல் உதவி ஆணையாளர் முருகேசன் மேலும் தனது சாட்சியத்தில் உதவி இயக்குநர் வட்டார தடவியல் ஆய்வகம் அவர்களுக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு அறிக்கை வேண்டி வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்தேன். பின்னர் சம்பவ இடத்தை புகைப்படம் எடுக்க ஏற்பாடு செய்து, பின்னர் சாட்சிகள் ஆனந்தராஜ் த/பெ. செல்வம், மோகனபிரியா க/பெ. ஆனந்தராஜ், சீனிவாசன் த/பெ. செல்வம், சீனிவாசன் த/பெ.

பழனிசாமி, உதயகுமார் த/பெ. கருணாநிதி, ரத்தினம் த/பெ. ஆறுமுகம் ஆகியோரை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் எதிரிகளை தேடிய போது இவ்வழக்கின் எதிரிகள் கன்னங்குறிச்சி காவல் நிலைய குற்ற எண்.359/2022 ச.பி. 341, 392 உ/இ 397, 506(ii) இதச வழக்கில் கன்னங்குறிச்சி காவல் ஆய்வாளரால் காவல் படுத்தப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்ட விவரத்தை தெரிந்து கொண்டு, பின்னர் இவ்வழக்கில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றப்பட்ட தடயங்களை அ.த.சா.ஆ.14–படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாக சாட்சியமளித்துள்ளார்.

21. அசா13 காவல் உதவி ஆணையாளர் முருகேசன் மேலும் தனது சாட்சியத்தில் 18.04.2022 தேதி இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் எதிரிகளின் சாதி சான்றிதழ்கள் பெற சேலம் வட்டாட்சியருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து, பின்னர் 20.04.2022 தேதி, இவ்வழக்கின் எதிரிகளை சேலம் மத்திய சிறையில் நீதிமன்ற காவலில் இருந்தவர்களை சிறை அலுவலர்கள் முன்பு தனிதனியே இவ்வழக்கின் நிமிர்த்தமாக சம்பிரதாயமாக கைது செய்து, கைது குறிப்பாணை எதிரிகளுக்கு சிறை அலுவலர் முன்பாக சார்வு செய்து, பின்னர் 21.04.2022 தேதி இவ்வழக்கின்

எதிரிகளை கைது செய்த விவரத்தை  ஆவணங்களுடன் நீதிமன்றத்தில் செய்து எதிரிகளை நீதிமன்றத்தில்  செய்ய உத்தரவு கேட்டு சேலம் முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் வேண்டுகோள் கடிதம் தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

22. அசா13 காவல் உதவி ஆணையாளர் முருகேசன் மேலும் தனது சாட்சியத்தில் 25.04.2022 தேதி சேலம் முதன்மை அமர்வு நீதிமன்ற உத்தரவுபடி எதிரிகளை சேலம் மத்திய சிறையிலிருந்து வழிக்காவல் மூலமாக நீதிமன்றத்தில்  செய்யப்பட்டார்கள் என்றும், அவர்களை மேற்படி நீதிமன்றம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி உத்தரவிட்டதாகவும், பின்னர் 12.05.2022 தேதி இவ்வழக்கின் சாட்சிகள் திலீப் மற்றும் சாதி சான்றிதழ் வழங்கிய சேலம் மண்டல துணை வட்டாட்சியர் கணேசன் மற்றும் வட்டாட்சியர் செம்மலை ஆகியோரை தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, 13.06.2022 தேதி சம்பவ இடத்தை ஆய்வு செய்த சேலம் மாநகர நடமாடும் தடய அறிவியல் உதவி இயக்குநர் வடிவேல் அவர்களிடம் ஆய்வறிக்கை பெற்றதாகவும், பின்னர் 03.07.2022 தேதி இவ்வழக்கின் சாட்சிகள் ஹரிகரன் என்ற புகைப்பட கலைஞர், சேலம் மாநகர நடமாடும் தடய அறிவியல் உதவி இயக்குநர் வடிவேல்  மற்றும் வழக்கை பதிவு

செய்த காவல் உதவி ஆய்வாளர் கார்த்திக் என்பவரையும் தனிதனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

23. அசா13 காவல் உதவி ஆணையாளர் முருகேசன் மேலும் தனது சாட்சியத்தில் 11.07.2022 தேதி கைப்பற்ற தடயங்களை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி இரசாயன அறிக்கை பெற வேண்டுகோள் கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும், தனது புலன்விசாரணையிலும் சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும் சம்பவம் நடந்தது உண்மை என்று தெரிய வந்ததால் 23.07.2022 தேதி அரசு சிறப்பு வழக்கறிஞர் கருத்துரை பெற்று 1 முதல் 3 எதிரிகள் மீது ச.பி. 294(b), 450, 436, 427 மற்றும் 506(ii) இதச மற்றும் 3(1)(r), 3(1)(s) மற்றும் 3(2)(va) பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் 2016ன் படியான எனது இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, 17.08.2022 தேதி நீதிமன்ற உத்தரவு படி மேற்படி தடயங்களை மேற்படி சேலம் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

24. இவ்வழக்கில் அசா2, அசா3, அசா5, அசா9 மற்றும் அசா11 ஆகியோர் அரசு தரப்பில் பிறழ் சாட்சிகளாக பாவித்து, குறுக்கு விசாரணை

செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு, அனுமதி வழங்கப்பட்டது. அ.சா.13ன் சாட்சியத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

25. மேற்கண்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக அமைந்துள்ள சங்கதிகளை குறித்து குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் படி 1 முதல் 3ஆம் எதிரிகளிடம் எடுத்துக்கூறி வினவியபோது, 1 முதல்3ஆம் எதிரிகள் மேற்படி சாட்சியங்களை மறுத்து பொய் சாட்சியம் என்று கூறினார்.

26. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. இரு தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் மற்றும் வழக்கு கோப்பு பரிசீலனைக்கப்பட்டது.

27. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் 1 முதல் 3 எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 450, 436, 427, 506(2)ன் படி மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டப்பிரிவுகள் 3(1)(r)&(s) மற்றும் 3(2)(va)ன் படி குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தக்க சாட்சிய சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

**28. தீர்வு:–**

இவ்வழக்கானது அசா1 ஆனந்தராஜ், கன்னங்குறிச்சி காவல் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின் பேரில் அதன் தன்மைக்கேற்ப காவல் உதவி ஆய்வாளர் கார்த்திக் என்பவர் கன்னங்குறிச்சி காவல் நிலைய குற்ற எண் 358/2022 சட்டப்பிரிவுகள் 294(b), 450, 436, 427, 506(2) இதச உ/இ 3 (1)(r), 3(1)(s), 3(2)(va) பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு ) சட்டப்படி பதிவு செய்த அ.த.சா.ஆ.11 –முதல் தகவல் அறிக்கை படி துவங்கியுள்ளது.

29. அரசு தரப்பு கற்றறிந்த அரசு சிறப்பு வழக்கறிஞர், இவ்வழக்கின் வாதி தனது முதன்மை சாட்சியத்தில் அரசு தரப்பு வழக்கை நிருபிக்கும் வகையில் சாட்சியமளித்துள்ளார் என்றும், இவ்வழக்கின் சம்பவ சாட்சிகளான அசா2, அசா3, அசா5, அசா9 மற்றும் அசா11 ஆகியோர் அரசு தரப்புக்கு ஆதரவாக இல்லாமல் பிறழ்சாட்சிகளாக மாறி இருப்பினும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அசா12 மற்றும் புலன் விசாரணை அதிகாரியான அசா13ன் சாட்சியம் மூலமாக அரசு தரப்பு வழக்கு நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், பாதிக்கப்பட்ட நிகழ்நிலை புகார்தாரர் அசா1 ஆனந்தராஜ் இந்து அருந்ததியர் என்ற பட்டியல் இனத்தை சேர்ந்தவர்

என்பதும், எதிரிகள் 1 முதல் 3 ஆகியோர் பட்டியல் அல்லது பழங்குடி இனத்தை சாராத வகுப்பை சார்ந்தவர் என்பது அசா6 மற்றும் அசா7 ஆகியோர் கொடுத்த அதசாஆ6, அதசாஆ7 மற்றும் அதசாஆ8 ஆகிய சான்றாவணங்கள் மூலம் நிருபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே 1 முதல் 3 எதிரிகளை குற்றவாளி என்று தீர்மானித்து உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

30. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், தனது வாதுரையில் இவ்வழக்கின் பாதிக்கப்பட்ட வாதியான அசா1 தனது குறுக்கு விசாரணையில் தனது முதன்மை சாட்சியத்திற்கு முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார் என்றும், சம்பவ சாட்சிகளான அசா2, அசா3, அசா5, அசா9 மற்றும் அசா11 ஆகியோர் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ள நிலையில், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அசா12 மற்றும் புலன் விசாரணை அதிகாரியான அசா13ன் சாட்சியத்தை மட்டும் கருத்தில் கொண்டு எதிரிகளை குற்றவாளிகள் என்று தீர்மானிக்க இயலாது என்றும், 1 முதல் 3 எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

31. இவ்வழக்கின் வாதியான அசா1 ஆனந்தராஜ் என்பவர் இந்து அருந்ததியர் என்ற பட்டியல் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதும், 1 முதல்

3ஆம் எதிரிகள் பட்டியல் அல்லது பழங்குடி இனத்தை சாராத வகுப்பை சாராதவர் என்பதும், அசா6 மற்றும் அசா7 ஆகிய வருவாய் துறை அதிகாரிகளின் சாட்சியம் மூலமாகவும், அவர்கள் வழங்கிய ஜாதி சான்றிதழ்களான அதசாஆ.6 வரிசை, அதசாஆ.7, அதசாஆ.8 ஆகிய சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது சம்மந்தமாக எதிரிகள் தரப்பில் அசா6ஐ குறுக்கு விசாரணை செய்த போது 1 மற்றும் 2ஆம் எதிரிகள் இந்து அருந்ததியர் எனும் பட்டியல் இனத்தை சார்ந்தவர் என்றும், 3ஆம் எதிரி இஸ்லாமிய தக்கனி என்ற சமுகத்தை சார்ந்தவர் என்றும், வருவாய் துறை அதிகாரியான அசா6 போலிசார் கேட்டதற்கிணங்க அதசாஆ6 வரிசை மற்றும் அதசாஆ7 ஆகிய சான்றாவணங்களை சாதி சான்றிதழ்களாக தவறாக வழங்கியுள்ளார் என்று கூறியுள்ளார். எனினும் எதிரிகள் தரப்பில் 1 மற்றும் 2ஆம் எதிரிகள் இந்து அருந்ததியர் மற்றும் 3ஆம் எதிரி முஸ்லிம் தக்கனி என்பதற்கான எந்த சான்றாவணங்களும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே வாய்மொழியான மறுப்புரையை மட்டும் கருத்தில் கொண்டு 1, 2ஆம் எதிரிகள் இந்து அருந்ததியர் என்று முடிவுக்கு வர இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

32. இவ்வழக்கின் வாதியான அசா1 தனது முதன்மை சாட்சியத்தில் அரசு தரப்பு வழக்கை நிருபிக்கும் வகையில் சாட்சியமளித்திருந்த போதிலும், தனது குறுக்கு விசாரணையில் "எனக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் முன்விரோதம் இல்லை. எங்கள் வீட்டு கூரை மின் கசிவினால் தீ பிடித்தது என்றால் சரிதான். புகாரில் சொன்னது போல எதிரிகள் ஆயுதங்களுடன் வந்து மிரட்டியதாக சொல்லப்பட்டுள்ள சம்பவம் எதுவும் நடக்கவில்லை. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். நான் காவல் நிலையம் சென்றபோது போலீசார் என்னிடம் வெற்றுதாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டு அ.சா.ஆ.1 ஐ பூர்த்தி செய்துக்கொண்டார்கள் என்றால் சரிதான்" என்று அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார். எனவே அசா1ன் முரண்பட்ட சாட்சியம் நம்பும் படியாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

33. இவ்வழக்கில் பார்வைமகஜர் சாட்சியாக முன்னிறுத்தப்பட்டுள்ள அசா4 உதயகுமார் தனது சாட்சியத்தில் பார்வைமகஜர் மற்றும் கைப்பற்றுதல் சம்மந்தமாகவும், சம்பவத்தை நேரில் பார்த்தது சம்மந்தமாகவும், சம்பவம் சம்மந்தமாக தான் தன்னுடைய மொபைல் போனில் வீடியோ எடுத்ததாகவும், கன்னங்குறிச்சியில் காவல் அலுவலராக பணி புரிந்த ஜாபர் என்பரின் செல்போன் எண் தனக்கு தெரியும்.

அவருடைய வாட்ஸ்அப்க்கு தான் தன்னுடைய மொபைல் போனில் எடுத்த வீடியோவை அனுப்பி வைத்ததாகவும், அந்த வீடியோ தற்போதும் தன்னுடைய மொபைல் போனில் உள்ளது என்று சாட்சியமளித்துள்ளார். எனினும் அரசு தரப்பில் மேற்படி வீடியோ சம்மந்தமான ஆதாரம் எதுவும் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. மேற்படி பொருண்மை அரசு தரப்பு வழக்கை பெரிதும் பாதிக்கும் வகையில் உள்ளது.

34. மேலும் அசா4 ஐ எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போது அ.சா.1 ஆனந்தராஜின் வீடு மின்கசிவு ஏற்பட்டதன் காரணமாக எரிந்ததாகவும், 1 முதல் 3 எதிரிகளை தனக்கு தெரியாது என்றும், சம்பவத்தை தான் நேரில் பார்க்கவில்லை என்றும், போலீசார் தன்னிடம் வெற்று காகிதத்தில் தான் கையொப்பம் பெற்றார்கள் என்றும், தன் முன்பாக வழக்கு சம்மந்தமான சொத்துகளை எதுவும் கைப்பற்றவில்லை என்றும், போலீசார் கேட்டுக் கொண்டதால் தான் முதல் விசாரணையில் அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சி சொன்னேன் என்று தனது முதன்மை சாட்சியத்திற்கு முற்றிலும் முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார். மேற்படி சாட்சியம் அரசு தரப்பு வழக்கை மேலும் பாதிக்கும் வகையில் உள்ளது.

35. இவ்வழக்கில் சம்பவ சாட்சிகளான அசா2, அசா3, அசா5, அசா9 மற்றும் அசா11 ஆகிய சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து சம்பவம் குறித்து அரசு தரப்புக்கு ஆதரவாக எடுத்து கொள்ள ஏதுமில்லை. எனவே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அசா12 மற்றும் புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆணையாளரான அசா13ன் சாட்சியத்தின் வாயிலாக மட்டும் எதிரிகள் குற்றம் புரிந்துள்ளார்கள் என்று முடிவுக்கு வர இயலாது. இவ்வாறான நிலையில் 1 முதல் 3 எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்று முடிவு செய்து எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிப்பதே நீதிக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

36. முடிவில், 1 முதல் 3ஆம் எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 450, 436, 427, 506(2)ன் படி மற்றும் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டப்பிரிவுகள் 3(1)(r)&(s) மற்றும் 3(2)(va)ன் படி குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமற்ற வகையில் நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை 1 முதல் 3 எதிரிகளுக்கு வழங்கி 1 முதல் 3 எதிரிகளை குவிமுச பிரிவு 235(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1 முதல் 3 எதிரிகளால் எழுதிக்

கொடுக்கப்பட்டிருக்கும் பிணை பத்திரங்களை ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது. மேலும் இவ்வழக்கில் அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சி.பி எண் 28/2022ல் உள்ள வழக்கு சொத்துக்களான அதசாபொ.1– பிளாஸ்டிக் பாட்டில், அ.த.சா.பொ.2– சாம்பல் ஆகியவற்றை மேல் முறையீட்டு காலத்திற்கு பின் அழித்து விடவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கம்யூட்டரில் தட்டச்சு செய்யப்பட்டு தன்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 3ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

S.JEYASINGH Digitally signed by S.JEYASINGH Date: 2026.02.03 18:50:01 +0530

**அமர்வு நீதிபதி,**
**பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம்,**
**சேலம்.**

**பின் இணைப்பு –**

**அரசு தரப்பு சாட்சியங்கள் –**

| சாட்சி எண் | சாட்சிகளின் பெயர் விவரம் | சாட்சிய விவரம் |
|---|---|---|
| அ.சா.1 | ஆனந்தராஜ் | வாதி/ பாதிக்கப்பட்ட சாட்சி |
| அ.சா.2 | சீனிவாசன் | சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | ரத்தினம் | பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜ்ர் சாட்சி |

| | | |
|---|---|---|
| அ.சா.4 | உதயகுமார் | சம்பவ சாட்சி மற்றும் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜ்ர் சாட்சி |
| அ.சா.5 | சீனிவாசன் | சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.6 | கணேசன் | 1, 2, 3 எதிரிகளுக்கு சாதி சான்றிதழ் வழங்கிய மண்டல துணை வட்டாட்சியர். |
| அ.சா.7 | செம்மலை | அசா1க்கு சாதி சான்றிதழ் வழங்கிய வட்டாட்சியர் |
| அ.சா.8 | ஹரிஹரன் | சம்பவ இடத்தை புகைப்படம் எடுத்த புகைப்பட கலைஞர் |
| அ.சா.9 | மோகனபிரியா | சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.10 | வடிவேல் | இயங்கும் தடய அறிவியில் ஆய்வக உதவி இயக்குநர் |
| அ.சா.11 | திலீப் | சம்பவம் பற்றி கேள்விப்பட்ட சாட்சி |
| அ.சா.12 | கார்த்திக் | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் |
| அ.சா.13 | முருகேசன் | வழக்கை புலன் விசாரணை செய்த காவல் உதவி ஆணையாளர் |

**அரசு தரப்புச் சான்றாவணங்கள்–**

| **சான்றாவணங்–களின் எண்.** | **சான்றாவணங்களின் விவரம்** | **யார் மூலம் குறியீடு செய்யப்பட்டது.** |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | புகார் மனு, நாள் 17.04.2022 | அசா1 |
| அ.த.சா.ஆ.2 | பார்வை மகஜரில் உள்ள அசா3ன் கையொப்பம், நாள் 17.04.2022 | அசா3 |
| அ.த.சா.ஆ.3 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அசா3ன் கையொப்பம், நாள் 17.04.2022 | அசா3 |
| அ.த.சா.ஆ.4 | பார்வை மகஜர், நாள் 17.04.2022 | அசா4 |
| அ.த.சா.ஆ.5 | கைப்பற்றுதல் மகஜர், நாள் 17.04.2022 | அசா5 |

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.6 வரிசை | 1, 2 எதிரிகள் சம்மந்தமாக அசா6 வழங்கிய ஜாதி சான்றிதழ், நாள் 11.05.2022 | அசா6 |
| அ.த.சா.ஆ.7 | 3ஆம் எதிரி சம்மந்தமாக அசா6 வழங்கிய ஜாதி சான்றிதழ், நாள் 11.05.2022 | அசா6 |
| அ.த.சா.ஆ.8 | அசா1 சம்மந்தமாக அசா7 வழங்கிய ஜாதி சான்றிதழ், நாள் 11.05.2022 | அசா7 |
| அ.த.சா.ஆ.9 | புகைப்படங்கள் மற்றும் குறுந்தகடு | அசா8 |
| அ.த.சா.ஆ.10 | குற்ற நிகழ்விட பார்வை அறிக்கை, நாள் 13.06.2022 | அசா10 |
| அ.த.சா.ஆ.11 | முதல் தகவல் அறிக்கை, நாள் 17.04.2022 | அசா12 |
| அ.த.சா.ஆ.12 | சேலம் மாநகர வடக்கு காவல் துணை ஆணையர் பிறப்பித்த செயல்முறை ஆணை, நாள் 17.04.2022 | அசா13 |
| அ.த.சா.ஆ.13 | மாதிரி வரைபடம், நாள் 17.04.2022 | அசா13 |
| அ.த.சா.ஆ.14 | படிவம் 91, நாள் 17.04.2022 | அசா13 |

**<u>அரசு தரப்புச் சான்றுப் பொருள்–</u>**

அதசாபொ.1– பிளாஸ்டிக் பாட்டில்

அ.த.சா.பொ.2– சாம்பல் கொஞ்சம்

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள்</u>**–இல்லை.

S.JEYASINGH Digitally signed by S.JEYASINGH Date: 2026.02.03 18:50:09 +0530

**அமர்வு நீதிபதி,**
**பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர்**
**(வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழான**
**வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம்,**
**சேலம்.**